# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1915 - 2015 මැයි මස 15 වැනි සිකුරාදා - 2015.05.15

*1915 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 248 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 248 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 249 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 250 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மே மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 118*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. ஏ. ஆர். தேசப்பிரிய அவர்கள், 2015, மாச்சு மாதம் 04 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

5-410/ 1

---

*2015 இன் இல. 119*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எல். கே. ஜி. குணவர்தன அவர்கள், 2015, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை மதுவரி ஆணையாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

5-410/ 2

---

*2015 இன் இல. 120*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம்அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. ஏ. எச். கே. ஜகத் சந்திரசிறி அவர்கள், 2015, மாச்சு மாதம் 04 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

எஸ். அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

5-410/ 3

# மற்றைய நியமனங்களும் பிறவும்

**இலங்கை கடற்படை - நிரந்தர கடற்படை**

அபகீர்த்தியாக கடற்படை சேவையில் இருந்து பதவி நீக்கம்

இலங்கை கடற்படை நிரந்தர பிரிவின், கீழ் குறிப்பிடப்படும் அதிகாரி 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியுடன் கடற்படை சேவையில் இருந்து பதவி நீக்கப்படும் :-

பதில் கடமையாற்றும் உப லெப்டினனட் (நாசெ) மடவல விக்ரமசிங்க செனவிரத்ன ராஜகருணா ஏகநாயக முதியன்செ றாலஹாமிலாகே அநுத் காவிங்க மடவல, என்ஆர்பீ 1687, இகப

எஸ்ஏஎம்ஜே பெரேரா,
ஆர்டப்பீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டீசீ, பீஎஸ்சீ,
வயிஸ் அட்மிரால்,
கடற்படை தளபதி.

கொழும்பு.
2015, ஏப்பிறல் 27.

5-414

---

*2015 இன் இல. 121*

**இலங்கை கடற்படை - நிரந்தர கடற்படை**

வகுப்புக்கு இடையில் மாற்றுதல்

கீழ் காணப்படும் பெயருடைய அதிகாரி 2015, மாச்சு மாதம் 31 ஆந் திகதியிலிருந்து உப லெப்டினனட் தரத்தில் உயர்த்துக்காக 2014, யூலை 03 ஆந் திகதியிலிருந்து அதிகாரப் பிரிவில் இருந்து கப்பல் நிர்மாண அல்லது திருத்தும் பிரிவிற்கு இடையில் மாற்றுவதற்கு அவரது பெயர் தரம் இலக்கம் அனைத்தும் கீழ் காணப்பட்டவாறு அமைய.-

உப லெப்டினனட் (நெவ்ப) நதுன்பத்ம வன்னிஆரச்சி, என்ஆர்எச் 3529, இகப

எஸ்ஏஎம்ஜே பெரேரா,
ஆர்டப்பீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டீசீ, பீஎஸ்சீ,
வயிஸ் அட்மிரால்,
கடற்படை தளபதி.

கொழும்பு.
2015, ஏப்பிறல் 27.

5-415

# அரசாங்க அறிவித்தல்கள்

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

*கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் ஆதனம் I ஆம் நிரலில் காணப்படுவது கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.*

*2. 2015.05.08 ஆந் திகதி தொடக்கம் 2015.05.22 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு ஹோமாகம காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.*

*3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு, எழுத்துமூலம் 2015.05.29 ஆந் திகதிக்குப் முன்பாக பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.*

**அட்டவணை**

| நிரல் I<br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | நிரல் II<br>காணியின் விபரங்கள் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம காணிப் பதிவகத்தில் G என்னும் பிரிவில் 575 ஆம் புத்தகத்தில் 253ஆம் இலக்க ஏடு. | மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் பல்லே பற்று ஹேவாகம் கோறளையில் ஹோகந்தர இல் அமைந்துள்ள "சரோஜினி எஸ்டேட்" என்னும் இடத்திற்கு எஸ். விக்ரமசிங்க உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் மூலம் 1982.07.14 ஆந் திகதி அளவிடப்பட்ட இலக்கம் H/654 ஆம் அளவிடையின் பிரகாரம் லொட் 21 இற்கான எல்லைகள் :-<br><br>வடக்கு : லொட் 16 ;<br>கிழக்கு : லொட் 20 ;<br>தெற்கு : லொட் 38 (பாதை) ;<br>மேற்கு : லொட் 22 மற்றும் பதிரணகே செமி இற்கு சொந்தமான காணி;<br><br>விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 21.08பே. | 1. எம். ஏ. எல்லேபொல பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1983.11.18 ஆந் திகதிய 2542 ஆம் இலக்கம் உடைய அறுதி உறுதி.<br><br>2. வீ. கே. ஐ. எஸ். என். கே. குருப்பு ஆரச்சி பி.நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.07.18 ஆந் திகதி 258 ஆம் இலக்க அறுதி உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/19/2015/ஏடு./தயா.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

5-269

---

## உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் (ஆங்கிலம்) ஒழுங்கு விதிக்கு அமைய விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கான பாடசாலைகளை பதிவு செய்வது தொடர்பான அறிவித்தல்

*உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் ஒழுங்கு விதியின் பிரகாரம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய 2015.04.01 ஆந் திகதியிலிருந்து மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் மீரிகம தேர்தல் தொகுதியின் மினுவாங்கொடை கல்வி வலயத்திற்குட்பட்ட பொஹதெல அம்பேபுஸ்ஸ "நமது பிள்ளைகள்" விசேட பாடசாலையில் செவிப் புலன் குறைபாடுகள், பார்வைக் குறைபாடுகள், மூளை வளர்ச்சிக்*

குறைபாடு, ஓடிஸம் குறைபாடு, பிறவிக் குறைபாடுகள் மற்றும் ஏனைய உடல் ஊனங்கள் கொண்ட பிள்ளைகளுக்கான உதவி நன்கொடை பெறும் விசேட பாடசாலையாக என்னால் பதிவு செய்யப்பட்டுள்ளதெனவும் திரு. டி. எம். திலகரத்ன அவர்களை பாடசாலையின் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளாரெனவும் இது தொடர்பில் ஏதாவது முறைப்பாடுகள் இருக்குமெனின், இவை குறித்த முறைப்பாடுகளை அறிவித்தல் விடுவிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைப்பதற்கு வகை செய்யும் பொருட்டு பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக இவ்வறிவித்தல் விடுக்கப்படுகிறது.

உபாலி மாரசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

முறைசாராக் கல்வி மற்றும் விசேட கல்விப் பிரிவு,
“இசுருபாய”,
பத்தரமுல்ல,
2015, ஏப்பிறல் 27.

5-420

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி

1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இலக்கம் : 1880011473
கடன் கணக்கு இலக்கம் : 476603, 946243, 1717165, 1719236, 1719238, 1723069, 1726322, 1726323 மற்றும் 1730388 - ஹாலிக் ரைஸ் மில்

2015, மாச்சு 30 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது:

“பொலநறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். எம். ரவுப் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.10.26 ஆந்திகதிய 1521, 2008.02.27 ஆந் திகதிய 1587, 2008.10.10 ஆந் திகதிய 1679 பொலனறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. அபேவர்தன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.11.03 ஆந் திகதிய 1592 ஆம் இலக்க முறிகளின் மீது கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்போது கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி இற்கு ஹாலிக் ரைஸ் மில் எனும் பெயர் மகுடத்தின் கீழ் பங்கு வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் கந்தே கெதர அசீஸ் மொஹமட் ஹாரிஸ் எனும் கந்தே கெதர மொஹமட் அசீஸ் மொஹமட் ஹாரிஸ் மற்றும் கந்தே கெதர அப்துல் ஹாலிக் எனும் கந்தே கெதர மொஹமட் அசீஸ் அப்துல் ஹாலிக் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி வருமதியான கொடுப்பனவை செலுத்த தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறிகளின் மீது ஏழு கோடியே எழுபத்தெட்டு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து நாநூற்று நாற்பத்தொரு ரூபா நான்கு சதம் (ரூ, 7,78,33,441.04) பணத்தொகை 2014.12.19 ஆந் திகதியன்று உள்ளவாறு கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளதாலும் மேற்படி ஒரு கோடியே பதின் மூன்று இலட்சத்து எண்பத்தேழாயிரத்து ஐம்பத்திரண்டு ரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 1,13,87,052.63) பணத்தொகையும் அத்துடன் 2014.12.20 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை காலத்துக்கான ஏழு கோடியே எழுபத்தெட்டு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து நாநூற்று நாற்பத்தொரு ரூபா நான்கு சதம் (ரூ. 7,78,33,441.04) பணத்தொகைக்கு 24% வருடாந்த வட்டியும், ரூபா 1,35,10,000 பணத்தொகைக்கு 6.5% வருடாந்த வட்டியும், 1,35,00,000 பணத்தொகைக்கு 8.91% வருடாந்த வட்டியும் (PLR +1%) மற்றும் ரூபா 3,50,00,000 பணத்தொகைக்கு 12.5% வருடாந்த வட்டியும் விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுபவையும் 1521, 1587, 1679 மற்றும் 1592 ஆம் இலக்க முறிகளினால் மேற்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனமும் வளவுகளும் கண்டி, மாவில்மட, வேவெல்ல ரோட், துட்டுகெமுனு மாவத்தையில் இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.”.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

1. வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேசம் மெதபத்துவ தோப்பா வெவ துலானே தோப்பா வெல எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. தொலொஸ்வல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1979.07.31 ஆந் திகதிய 2777/A ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் A எனும் காணித்துண்டின் எல்லைகள் - வடகிழக்கு : இதே காணியின் மிகுதிப் பகுதி ; தென்கிழக்கு : பெஸ்டியன் என்பவருக்குச் சொந்தமான வயல்; தெற்கு : மேறகூறிய வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் B ஐ பிரிக்கும் ஓடை மற்றும் ; வடமேற்கு : ஒதுக்கப்பட்டுள்ள வன பிரதேசம் சுற்றுவட்டப் பாதையும் எனும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள மூன்று றூட் பதினாறு பேர்ச் (0ஏ. 3றூ. 16பே.) விஸ்தீரனமான காணியும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது பொலநறுவை காணிப் பதிவகத்தில் A 32/181 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேசம் மெதபத்துவ தோப்பா வெவ துலானே தோப்பா வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள மினிபிட்டியே கெலே எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. அபேகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.12.13 ஆந் திகதிய 517 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் 2 எனும் காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : வரைபட இல. 517 இல் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 ; கிழக்கு : வரைபட இல. 517 இல் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 3 ; தெற்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. தொலொஸ்வல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1979.01.29 ஆந் திகதிய 2777/A ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் A மற்றும் ; மேற்கு : பாதை பிரவேசமும் மற்றும் பிரதான பாதையிலிருந்து நவ நகரய சுற்று வட்டப் பாதையும் எனும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள ஒரு றூட் முப்பத்தொரு பேர்ச் (0ஏ. 1று. 31பே.) விஸ்தீரணமான காணியும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது பொலனறுவை காணிப் பதிவகத்தில் A 30/277 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேசம் மெதபத்துவ தோப்பா வெவ துலானே தோப்பா வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள மினிபிட்டியே கெலே எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளளைவயாளர் ஆர். பி. அபேகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.12.13 ஆந் திகதிய 517 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் 3 எனும் காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : வரைபட இல. 517 இல் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 ; கிழக்கு : மேற்கூறிய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 4 ; தெற்கு : மேற்கூறிய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 4 மற்றும் ஓடை ; மேற்கு : மேற்கூறிய வரைபட இல. 2777/A இல் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 4 எனும் இவ்வெல்லைக்குள் பதினேழு பேர்ச்சஸ் (0ஏ. 0று. 17பே.) விஸ்தீரணமான காணியும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது பொலனறுவை காணிப் பதிவகத்தில் A 30/282 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேசம் மெதபத்துவ தோப்பா வெவ துலானே தோப்பா வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள மினிபிட்டியே கெலே எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. முதுன்கொத்கே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1993.08.22 ஆந் திகதிய 2000 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் 1 எனும் காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : இதே காணியின் மிகுதிப் பகுதி ; கிழக்கு : கிரிஹாமி மற்றும் மற்றையவர்களுக்குச் சொந்தமான வயல் ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. முதுன்கொத்கே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1991.10.06 ஆந் திகதிய 1151 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 2 மற்றும் ; மேற்கு: ஹாலிக் அரிசி ஆலைக்குச் சொந்தமான காணி எனும் இவ்வெல்லைக்குள் ஒரு ஏக்கர் ஒரு றூட் (1ஏ. 1று. 0பே.) விஸ்தீரணமான காணியும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது பொலனறுவை காணிப் பதிவகத்தில் A 30/283 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேசம் மெதபத்துவ தோப்பா வெவ துலானே தோப்பா வெல எனும் கிராமத்தில் அமைந்துள்ள மினிபிட்டியே கெலே எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. முதுன்கொத்கே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.11.09 ஆந் திகதிய 1246 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் 1 எனும் காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் குமாரசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1962.06.21 ஆந் திகதிய 2905 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் A ; கிழக்கு : கிரிஹாமிக்குச் சொந்தமான வயல் ; தெற்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. முதுன்கொத்கே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1993.08.22 ஆந் திகதிய 2000 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 மற்றும் ; மேற்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. குமாரசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1962.06.21 ஆந் திகதிய 2905 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் E (இதே காணியின் மிகுதி பகுதி) மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. அபேகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.12.13 ஆந் திகதிய 517 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1, 2, 3 மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. முதுன்கொத்கே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1993.08.22 ஆந் திகதிய 2000 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1 எனும் இவ்வெல்லைக்குள் ஒரு ஏக்கர் இரண்டு றூட் முப்பது பேர்ச்சஸ் (1ஏ. 2று. 30பே.) விஸ்தீரணமான காணி (இது தவறுதலாக பிரசித்த நொத்தாரிசு ஜீ. எஸ். ஹரிஸ்சந்திர என்பவரினால் 1995.07.01 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1003 ஆம் இலக்க காணி உறுதியில் ஒரு ஏக்கர் மூன்று றூட் முப்பது முப்பது பேர்ச் (1ஏ. 3று. 30பே.) என குறிப்பிடப்பட்டுள்ளது) மேற்கூறிய வரைபட இல. 1246 பொலன்னறுவை காணிப் பதிவகத்தில் A 32/182 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ரஞ்சனி கமகே,
கம்பனிச் செயலாளர்.

5-376

---

**சம்பத் வங்கி பீ. எல். சீ.**

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கந்தெர இந்தன பிரவும்பல
கணக்கு இல.: 0031 1000 4310

2015, மாச்சு மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுகளான கே. எஸ். பீ. டபிள்யூ. ஜயவீர என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் 15 ஆம் திகதியிடப்பட்ட இல. 4513, சீ. ஜீ. பண்டார என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, நவெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 949 மற்றும் கே. எஸ். பீ. டபிள்யூ. ஜயவீர என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, செத்தெம்பர் 02 ஆம் திகதியிடப்பட்ட இல. 4959 எனும்

ஈட்டுமுறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் எனும் வகையில் கடமைப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெயர் மற்றும் வடிவில் "கந்தெர இந்தன பிரவும்பல" எனும் மகுடத்தின் கீழ் இயங்கும் வியாபாரத்தின் ஏக உரிமையாளரான முத்தா மெரிஞானகே பிரேம ஷாந்த என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 4513, 949 மற்றும் 4959 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் எழுபத்தொன்பது இலட்சத்து நாற்பத்தோராயிரத்து நூற்று ஐம்பத்தொரு ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ. 79,41,151.44) 2015, பெப்புருவரி 12 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட எழுபத்தொன்பது இலட்சத்து நாற்பத் தோராயிரத்து நூற்று ஐம்பத்தொரு ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ. 79,41,151.44) 2015, பெப்புருவரி 13 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 4513, 949 மற்றும் 4959 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து நாநூற்று எழுபத்துமூன்று சதம் (ரூ. 1,82,473) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு வீதம் (12%) மேலும் அறுபத்தேழு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரம் ரூபா (ரூ, 67,59,000) அத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு வீதம் (17%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள் , ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 4513, 949 மற்றும் 4959 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனையின் பாணந்துறை பெத்த, பாணதுறை (கெசெல்வத்தை உப அலுவலகம்) பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹொரதுடுவையில் அமைந்த காலி வீதி, வரிமதிப்பீட்டு இல. 720 ஐ ஏற்ற "ஹொரேதுடுவை குருந்துடுவ எனும் கொரக்ககாஹாலந்த மற்றும் பொக்குனெவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஆர் எம். பெர்னான்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, யூலை 16 ஆந் திகதியிட்ட இல. 750 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : ஜீ. ஜீ. நந்தசேன உரிமம் கோரும் வரிமதிப்பீட்டு இல. 6 ஐ ஏற்ற சொத்து, பீ. லியனகே உரிமம் கோரும் இல. 37 ஐ ஏற்ற சொத்து மற்றும் யு. எல். எஸ். சில்வா உரிமை கோரும் வரிமதிப்பீட்டு இல. 35 ஐ ஏற்ற சொத்து ; கிழக்கு : இல. 750 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் A ; தெற்கு : வீடுகளுக்கான பாதை, மற்றும் ; மேற்கு : இல. 750 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் C மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஆர். குமாரகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, நவெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 1681 எனும் வரைபடத்தில் லொட் 1A ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச் (0ஏ. 0றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 750 எனும் வரைபடத்திற்கு அமைவாக பாணந்துறை காணிப்பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் F 521/ 263 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிக் குழுமச் செயலாளர்.

5-387

---

## சம்பத் வங்கி பீ. எல். சீ.

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

எம். டீ. எம். எம். ஹேவாகம
கணக்கு இல.: 0073 5000 1411

2013, நவெம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் தமது பதிவு அலுவலகத்தை ஸ்தாபித்துள்ள, சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசுவான கே. என். கே. கருணாதிலக்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, ஓகத்து 29 ஆம் திகதியிடப்பட்ட இல. 328 எனும் ஈட்டுமுறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் எனும் வகையில் கடமைப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முதலிகே டொன் மெனிக்மாதவ ஹேவாகம என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 328 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ஐம்பத்தாறு இலட்சத்து ஆயிரத்து ஐநூற்று பதினைந்து ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூ. 56,01,515.88) 2013, நவெம்பர் 05 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட ஐம்பத்தாறு இலட்சத்து ஆயிரத்து ஐநூற்று பதினைந்து ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூ. 56,01,515.88) 2013, நவெம்பர் 06 ஆந் திகதி முதல் இல. 328 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நாற்பத்தெட்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐநூற்று முப்பத்தாறு ரூபா தொண்ணூற்று

ஏழு சதம் (ரூ. 48,66,536.97) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள் , ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 753 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா ராகம்பத்துவின் அலுத்குரு கோறளை வத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் பல்லியா வத்தையில் அமைந்த (காமேல் மாவத்தை) வரிமதிப்பீட்டு இல. 4/A ஐ ஏற்ற "கிரலகாஹாதெனிய குருந்துவத்த" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜீ. குணத்திலக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, யூன் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 7463B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A/2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் A/1 ; கிழக்கு : A/3 ; தெற்கு : எஸ். நானயக்காரவினது காணி மற்றும் ; மேற்கு : காமேல் மாவத்தை ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு தசம் ஆறு பேர்ச். (0ஏ. 0றூ. 8.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமை உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 7463B எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் B 667/351 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிக் குழுமச் செயலாளர்.

5-388

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.